Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் 2037 புரட்டாதி 16 திங்கட்கிழமை (02.10.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 307

# இலங்கை விடயத்தில் ஒதுங்கியிருந்தமை இந்தியாவின் பெரும் ராஜதந்திரத் தவறு



## முன்னாள் 'றோ' தலைவர் விமர்சனம்

புதுடில்லி, ஒக்டோபர் 02

**இலங்கையில் சமாதானத்தைக் கொண்டுவருவதற்கு இந்தியா தீவிரமான பங்களிப்பைக் கூடுதலாகச் செய்ய முன்வராமல் தவறு இழைத்திருப்பது இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைக்கு நேர்ந்த இமாலயத் தவறாக இருக்கப் போகிறது என்று இந்தியாவின் புலனாய்வு முகவர் நிறுவனமான 'றோ'வின் முன்னாள் தலைவரான ஜே.கே. சின்ஹா எச்சரித்திருக்கிறார்.**

**இலங்கை விவகாரத்தில் ஒதுங்கியிருந்ததன் மூலம் பெரும் இராஜதந்திரத் தவறை இந்தியா செய்து விட்டதாகவும் அவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.**

''இலங்கையின் சமாதான முயற்சிகளில் இந்தியா ஓரமாக ஒதுங்கியிருந்து பார்வையாளனாக இருப்பதோடு திருப்தியடைந்து விட்டது. இதற்கு விடுதலைப் புலிகள் பற்றிய ஐயமும், அவநம்பிக்கையும் காரணமாக இருக்கலாம்'' என்றும் சின்ஹா குறிப்பிடுகிறார்.

'றோ' எனப்படுகின்ற ஆராய்ச்சி மற்றும் ஆய்வுப் பிரிவு நிறுவனமே இந்தியாவின் தேசியப் புலனாய்வு முகவர் நிறுவனமாகும்.

இதன் தலைவராக ஜே.கே. சின்ஹா கடந்த வருடம் வரை பதவி வகித்து பணியாற்றியிருக்கிறார்.

'இந்தியன் டிபென்ஸ் றிவியூ' என்ற இந்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## வீடியோக் கடை உரிமையாளர் மன்னாரில் நேற்றிரவு சுடப்பட்டார்

மன்னார், சின்னக்கடைப் பகுதியில் நேற்று இரவு 8.50 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

மன்னாரைச் சேர்ந்த மச்சேந்திரா தேவன் என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர் அப்பகுதியில் வீடியோக்கடை, மினித் தியேட்டர் என்பவற்றை நடத்திவருபவர் எனத் தெரிவிக்கப்பட்டது. இவரது வயிற்றுப் பகுதியிலும் நெஞ்சுப் பகுதியிலும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன.

இவர் உடனடியாக மன்னார் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். (ஜ-12)

## ஜீ.சீ.ஈ. பெறுபேறுகள் அடுத்த வாரமே!

கொழும்பு, ஒக்.2

ஜீ.சி.ஈ. உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள் அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். முன்னதாக இப் பெறுபேறுகள் நேற்றிரவு வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக ஆணையாளர் எதிரிசிங்க மேலும் கூறுகையில், ''யாழ்ப்பாணம், கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள பரீட்சார்த்திகளின் செய்முறைப் பரீட்சைக்கான புள்ளிகள் கிடைப்

(06 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுக்கான முன்னேற்பாடுகள் பற்றி இரு தரப்போடும் பேச போவர் வருகை

கொழும்பு, ஒக்.2

இலங்கை சமாதான முயற்சிகளுக்கான நோர்வேயின் விசேட தூதுவர் ஜோன் ஹன்ஸன் போவர் நேற்று கொழும்பு வந்தடைந்தார்.

போவரின் இந்த விஜயம் முக்கியமாக இலங்கை அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் அமைதிப் பேச்சை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக அமையும் என்று அரச சமாதானச் செயலகம் தெரிவித்துள்ளது.

இது தவிர, நோர்வேயின் சர்வதேச விவகார அமைச்சர் எரிக் சொல்ஹெய்மும் இலங்கை வரவுள்ளார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுத் தொடர்பாத தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து உறுதியான முடிவொன்றை நோர்வே இராஜதந்திரிகள் பெறுவார்கள் என்று தான் நம்புகிறார் என்று இலங்கையின் பாதுகாப்புப் பேச்சாளர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

பேச்சுகளுக்குச் சாதகமான முடிவை போவரினால் பெறமுடியாத பட்சத்தில் அமை

(06 ஆம் பக்கம் பார்க்க)

## தலைநகரில் இரு மாதங்களில் கடத்தப்பட்டோர் தொகை 33

கொழும்பு, ஒக்.2

கொழும்பில் கடந்த இரு மாதகாலப் பகுதியில் 33 பேர் கடத்தப்பட்டுள்ளனர் என ஆட்கடத்தல் மற்றும் படுகொலைகள் தொடர்பான நடவடிக்கைகளைக் கண்காணிக்கவென உருவாக்கப்பட்டுள்ள 'மக்கள் கண்காணிப்புக் குழு' தெரிவித்துள்ளது.

இவர்களில் 9 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் எஞ்சிய 11 பேரின் விவரங்கள் எவற்றையும் பெறமுடியாமல் உள்ளது என்றும் அக்குழு மேலும் தெரிவித்துள்ளது.

கடத்தப்பட்டவர்களில் 3 சிங்களவர்களும் அடங்குகின்றனர். கடத்தல்கள், கொலைகள் தொடர்பாக நாடளாவிய ரீதியில் மக்கள் எம்மிடம் தகவல் தெரிவிக்கலாம். அவர்களை மீட்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று இக்குழுவின் தலைவர் சிறிதுங்க ஜயசூரிய நேற்றுக் கூறினார்.

(06 ஆம் பக்கம் பார்க்க)

## ஒஸ்லோவில் புலிகளுடன் பேச்சு நிச்சயம் என்கின்றார் கோஹென்ன

கொழும்பு, ஒக்.02

ஒஸ்லோவில் பேச்சு நடத்துவது தொடர்பாக அரசு நோர்வேயுடன் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருகிறது. எனவே பேச்சுகள் நிச்சயம் இடம்பெறும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அரசு சமாதான செயலகத்தின் பணிப்பாளர் பாலித கோஹென்ன.

ஏ.பி. செய்தி நிறுவனத்துக்கு அளித்த செவ்வி ஒன்றில் அவர் கூறியிருப்பதாவது:-

ஒஸ்லோவில் நிச்சயமாகப் பேச்சு நடைபெறும். ஆனால், ஒரே வருத்தம் இந்தச் சமாதான காலத்தைப் பயன்படுத்தி போர் நடவடிக்கைகள் மற்றும் ஆட்சேர்ப்பு - ஆயுதக் குவிப்பு ஆகியவற்றில் விடுதலைப் புலிகள் ஈடுபடக்கூடாது. இதைத்தான் கடந்த காலங்களில் அவர்கள் செய்தனர்.

ஜெனிவாவில் இந்த ஆண்டின் தொடக்கத்தில் பேச்சுக்களை நாம் நடத்தியிருந்

(06 ஆம் பக்கம் பார்க்க)

# இனியும் காலத்தைத் தாழ்த்தாது மாணவர் பகிஷ்கரிப்பை கைவிடுக

## யாழ்.ஆயர் அவசர வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக்.2

தமிழ் மக்கள் வேறு எந்த நலன்களுக்காகவும் கல்வியைப் பேரம் பேசியவர்கள் அல்லர்.

எனவே இனியும் காலந் தாழ்த்தாது மாணவர்களின் பகிஷ்கரிப்பை உடன் நிறுத்தும்படி சம்பந்தப்பட்டவர்களை வேண்டுகிறோம்.

இவ்வாறு யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் மாணவர்களுக்கு அவசர வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் நடைபெற்றுவரும் பாடசாலை பகிஷ்கரிப்பைக் கைவிடக்கோரி நேற்று விடுத்த அறிக்கை ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

இடம்பெயர்ந்து பாடசாலைகளில் இருப்போர் அவற்றை விட்டு விலக உரிய ஏற்பாடுகளைச் செய்தும், போதுமான போக்குவரத்து சேவை, தடையற்ற மின்சாரம், ஊரடங்கு தளர்வு மற்றும் வசதிகளை வழங்கி இயல்பு நிலையைத் தோற்றுவித்து கல்விச் சேவை தொடர்வதற்கு சம்பந்தப்பட்ட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் ஆயரின் அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அறிக்கையின் முழு விவரமும் வருமாறு:-

நடைபெற்றுக்கொண்டிருக்கும் கொடிய போரினால் நாம் எமது நிலத்தை, வீடுகளை, செல்வத்தை, சேமிப்புக்களை, கல்விமான்களை, பெற்றோரை, இளையோரை, ஏன் எமது மனித மாண்பையும், சிந்திக்கின்ற கருத்து

(06 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்கண்ணிவெடிகள் கற்பிட்டியில் மீட்பு

கொழும்பு, ஒக். 02

கற்பிட்டிக் கரையோரப் பிரதேசத்திலுள்ள கண்டக்குழி என்ற இடத்தில் நேற்று இரு கடற்கண்ணிவெடிகள் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட இரு கடற்கண்ணிவெடிகளும் கடலில் வெடிக்கும் தன்மை கொண்டவை என்று கற்பிட்டிப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். மீட்கப்பட்ட ஒவ்வொரு குண்டுகளும் 20 கிலோகிராம் நிறையுடையது.

(06 ஆம் பக்கம் பார்க்க)

# நிவாரணப் பணியாளருக்கு ஊறு விளைவிக்கும் செயல்கள் வேண்டாம் என்கிறது செஞ்சிலுவை

## யாழ்.கிரனேட் வெடிப்புச் சம்பவத்தை அடுத்து அக்குழு அறிக்கை

கொழும்பு, ஒக்.02

மனிதநேயப் பணிகளில் ஈடுபடும் தொண்டு நிறுவனப் பணியாளர்களின் பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் நடவடிக்கைகளில் எத்தரப்புகளும் ஈடுபடவேண்டாம் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கேட்டிருக்கிறது.

யாழ்.நகரில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் அலுவலகம் முன்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற கைக்குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்தே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கின்றது.

செஞ்சிலுவைக் குழு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

செப்ரெம்பர் 30ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின்

(06 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து விதிகளை அனுசரியுங்கள் இயன்றவரை விபத்துகளைத் தவிர்க்கலாம்

## சாவகச்சேரி நீதிபதி அறிவுரை

தென்மராட்சி, ஒக்.2

போக்குவரத்து விதிமுறைகளுக்கு அமைவாக வாகனங்களைப் பயன்படுத்தினால் செலுத்தினால், அநியாய உயிரிழப்புகள் ஏற்படுவதைத் தடுக்க முடியும். தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் மக்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டு அநியாய உயிரிழப்புகளை தவிர்த்துக்கொள்ள முடியும்.

இவ்வாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிபதி பொதுமக்களுக்கு அறிவுரை வழங் கியுள்ளார்.

அண்மையில் மிருசுவில், மந்துவில் ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட உயிரிழப்பு கள் பாவனைக்கு உதவாத வாகனங்களைப் பயன்படுத்தியமையினாலேயே ஏற்பட்டுள்ளன. இவ்வாறான வாகனங்களை பொதுமக்கள் தவிர்ப்பது உயிரிழப்புகளை தடுக்க உதவும்.

அத்துடன் வாகனங்கள் வைத்திருப்போர் அளவுக்கதிகமான பொருள்களை ஏற்றிச்செல்வது, அளவுக்கதிகமாக பயணி களை ஏற்றிச்செல்வதையும் -

மோட்டார் சைக்கிள்கள், மிதிவண்டி கள் ஆகியவற்றில் அளவுக்கதிகமான பொருள்கள், ஆள்களை ஏற்றிச்செல்வதையும்-

மிதிவண்டிகளில் செல்வோர் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடிக்காமல் சமாந்தரமாகச் செல்வதையும் தவிர்க்க வேண்டும்.

கஷ்டமான சூழ்நிலையில் வாழும் மக்கள் துக்ககரமான சம்பவங்களை எதிர் நோக்குவதை தடுக்க மக்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் -

இவ்வாறான சம்பவங்கள் நிகழாது தடுக்க பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு கொடிகாமம், சாவகச்சேரி ஆகிய பொலீஸாருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாவும் - நீதிபதி வேண்டுகோளில் குறிப்பிடப்பட்டுள்ளது.


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்
நாகலிங்கம் முத்துக்குமாரசாமி
தோற்றம் 19-03-1940 மறைவு 17-08-2006

கடந்த 17-08-2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் நாகலிங்கம் முத்துக்குமாரசாமி அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (02-10-2006) திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி வடக்கு,
கைதடி.
(54011)
குடும்பத்தினர்.

## 45ஆவது நாள் நினைவஞ்சலி

மனம் மகிழ உதயம் 02 * 09 * 1980



கண்நெகிழ மறைவு 19 * 08 * 2006

சூரியபாலன் மயூரதன் [மயூர்]

ஆறாத் துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு
மீளாத் துயில் கொண்ட குலவிளக்கே மயூர்
சுடர்விட்டு பிரகாசிக்கும் வேளையதில் – பாதகரின்
துப்பாக்கிக் குண்டதற்கு இரையானாய்
சுடர்விளக்கே மயூர்! எங்கு சென்றாய்யென
கதறுகின்றோம்! கலங்குகின்றோம் உன் சகோதரர்கள்
பாசமுடன் சேர்ந்திருந்த உன் உறவுகளை
கண்ணீரில் தவிக்க விட்டு எங்கு சென்றாய்
அன்னாரின் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.

14, பழம் றோட்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

பிரிவால் வாடும்:
தந்தை, சகோதரர்கள்,
மனைவி, மகள், மாமன், மாமி.

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



02 : 10 : 2006

அரசடி வீதி,
கட்டுடை, மானிப்பாயைச்
சேர்ந்த
பாஸ்கரன்- பற்றிக்சியா
தம்பதியரின் தவப்புதல்வி
செல்வி பிருநலா

இன்று (02.10.2006)
திங்கட்கிழமை தனது முதலாவது பிறந்த
தினத்தை லண்டனில் உள்ள தனது
இல்லத்தில் கொண்டாடுகின்றார்.
இவரை அன்பு அப்பா, அப்பப்பா,
அம்மம்மா, மாமா, மாமி, சித்தப்பா,
பூட்டிமார், மச்சான்மார் ஆகியோர்
இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினால்
ஆசீர்வதித்து வாழ வாழ்த்துகின்றார்கள்.




தகவல்:
அப்பா–பி.பாஸ்கரன்


## பல்கலைக்கழக மாணவர் கவனத்திற்கு

யாழ்ப்பாணம், ஒக்.2

யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களில் கப்பலில் பயணம் செய்ய இடம் கிடைக்காதவர்களை இன்று பல்கலைக்கழக மாணவர் நலன்சேவைப் பிரிவில் பதியுமாறு பதில் துணைவேந்தர் கேட்டுள்ளார்.

## கேதாரகௌரி விரதம் இன்று ஆரம்பமாகிறது

யாழ்ப்பாணம்,ஒக்.2

குடாநாட்டில்உள்ள சகல ஆலயங்களி லும் கேதார கௌரி விரதம் இன்று ஆரம்பமாகின்றது. மேற்படி விரதம் இம்மாதம் 21ஆம் திகதி சனிக் கிழமை பூர்த்தியடை யும். அன்றையதினம் பக்தர்கள் காப்புக் கட்டும் நிகழ்வுகள் அம்மன் மற்றும் சிவன் கோயில்களில் நடைபெறும்.

அராலி ஆவரம் பிட்டி முத்துமாரியம் மன் ஆலயத்தில் தின மும் முற்பகல் 10 மணிக்கு கும்பபூசை, 10.30 இற்கு திரவிய அபிஷேகம், 11 மணி க்கு கும்ப அபிஷேகம், 11.30 இற்கு உச்சிக்காலப்பூசை, 12 மணிக்கு கேதாரகௌரி விரதப் பூசை, 12.30 மணி க்கு கேதாரகௌரி நாம பஜனை என்பன இடம்பெறும்.

விரதம் அனுஷ்டிக்கும் அடியவர்கள் தினமும் மாலை 4 மணிதொடக்கம் 5 மணிவரை பரிபாலன சபைக் காரியாலயத்தில் காப்பு பெறுவதற்கான பதிவுகளை மேற்கொள்ளலாம் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.(203)

* * *

தென்மராட்சி, ஒக்.2

மீசாலை வடக்கு பூதவராயர் ஆலயத்தில் விரதம் அனுஷ்டிப்பவர்களை ஆலய பரிபாலனசபையினருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(203)

* * *

சுழிபுரம், ஒக்.2

சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆல யத்தில் தினமும் காலைபூசையைத் தொடர்ந்து கௌரி விரத விசேடவழிபாடு இடம்பெறும்.

விரதம் அனுஷ்டிப்பவர்களை ஆலயத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-117)

* * *

வண்ணை கண்ணாதிட்டி காளியம்பாள் ஆலயத்திலும் விரதம் அனுஷ்டிக்கப் படவுள்ளது.

காப்புக்கட்டுவோர் ஆலயத்தில் பதிவுகளை மேற்கொள்ளலாம். (203)

## நல்லூர் பி.சபையின் ஐந்து வீதிகள் புனரமைப்பு

நல்லூர்,ஒக்.2

நல்லூர் பிரதேச சபை தனது பகுதியில் உள்ள கென்னடி வீதி, பிரம்படி இரண்டாம் ஒழுங்கை, கலாசாலை 4ஆம் குறுக்குவீதி, சந்தர் வீதி, குளக்கரை ஒழுங்கை ஆகிய ஐந்து வீதிகளைப் புனரமைக்கும் பணிகளை தற்சமயம் மேற்கொண்டுள்ளது. சபையினதும் பிரமாண அடிப்படை நிதியிலும் மேற்படி புனரமைப்புப் பணிகள் இடம்பெறுவதாகவும் சபையின் செயலாளர் பொ. வைரமுத்து தெரிவித்தார்.(ப-111)


ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல
கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்
1 கொரி–15:22

## 45 ஆம் நாள் நினைவு தின ஜெபவழிபாடு



அமரர் கோவிந்தன் வள்ளி
தோற்றம் 12.12.1941 மறைவு 19.08.2006

அன்னாரின் மறைவு தினத்தை நினைவு கூர்ந்து 02.10.2006 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் வழிபாட்டிலும் பகல் உணவுப் பங்களிப்பிலும் கலந்துகொள்ளும்படி உங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கரம்பொன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.
53979
கோ.சந்திரராசா
(மகன்)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுப்பிரமணியம் பாக்கியம்

கொண்டலடி லேன், நல்லூர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுப்பிரமணியம் பாக்கியம் நேற்று (01.10.2006) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின்அன்பு மனைவியும் குணரட்ணம்,விஜயநாயகி காலஞ்சென்றவர்களான ராஜலிங்கம், ஜெயரட்ணம் (பாதுகாப்பு உத்தியோகத்தர், மக்கள் வங்கி, கன்னாதிட்டி கிளை), சாந்தநாயகி மற்றும் ஜீவநாயகி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

28/6, கொண்டலடி லேன்,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ஜெ.கனோஜி,
(பேரன்).

## பொன்னம்பலம் நாகம்மா



அச்செழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நாகம்மா நேற்று (01.10.2006) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா -சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் மகளும் சரவணமுத்து - இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் அமரர் பொன்னம்பலத்தின் பாசமிகு மனைவியும் இலக்குமி, காலஞ்சென்ற அற்புதமலர், இராஜேஸ்வரி, இராசேந்திரன் (கனடா), இரவீந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இலங்கநாதன், சிவபாலன், தர்மகுலசிங்கம் (சாவகச்சேரி பிரதேச சபை), ஞானரூபி (கனடா), கலையரசி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற சிவகீர்த்தா, சிவமுகுந்தன், தர்சன், தனோசன், தார்மிகன், மேனுசா (கனடா), ஜானுசா (கனடா), சனோசன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் சிவபாக்கியம், தங்கரத்தினம், நல்லதம்பி, வல்லிபுரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2006) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அச்செழு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்செழு மத்தி,
நீர்வேலி.
(54047)

தகவல்:
குடும்பத்தினர்.
த.தர்மகுலசிங்கம் (மருமகன்).

## திருமதி நல்லதங்கம் நமசிவாயம்



புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி நல்லதங்கம் நமசிவாயம் நேற்றுமுன்தினம் (30.09.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - செங்கமலம் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான பரராஜசிங்கம் - பாக்கியலெட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா, அருணாச்சலம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காராளபிள்ளை (கொழும்பு), மகாலிங்கம் (சுவிஸ்), தர்மலோஜி (சித்தி - புங்குடுதீவு), ரதிபவான் (யாழ்ப்பாணம்), பத்மாவதி (லண்டன்), சந்திராதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும் அருந்தவநாயகி (கொழும்பு), புனிதவதி (புங்குடுதீவு), இராஜதுரை (அதிபர், புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்), செல்வரெட்ணம் (மகாசக்தி பெஷன், யாழ்ப்பாணம்), ஜெயசீலன் (லண்டன்), அன்பழகன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் சிவப்பிரியா (ஜேர்மன்), சிவகுமார் (சுவிஸ்), சிவகாந்தன் (விஷ்வல் வீடியோ ஓடியோ கொழும்பு), முரளி தரன் (லண்டன்), தனுஷன் (தனுஷ் கொமினிக்கேசன், கொழும்பு), யசோதினி (உப தபால் அதிபர், ஊரதீவு), சிந்துஷா (கொழும்பு), வசிதரன், கோபினா (மாணவி, கமலாம்பிகை வித்தியாலயம்), நிசந்தன் (மாணவன், யாழ். இந்துக் கல்லூரி), தர்ஷிகா (மாணவி, யா/ இந்து மகளிர் கல்லூரி), லாவர்தன், நிவேதன் (மாணவர்கள், யா/ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), தூரிகா, சீனுஜன் (லண்டன்), அஜந்தன் (கனடா), மதுஷா (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அபிநேகா, சிநேகா, கஸ்வினி ஆகியோரின் பாசமிகு பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2006) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கேரதீவு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(54040)

தகவல்:
ந.காராளபிள்ளை (மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 365 நாள்களில்................!
# எம் மத்தியில் மலையென உயர்ந்த மாண்பு....!



## அமரர் உயர்திரு
# கணபதி இராசதுரை

(B.Ed, B.A(Pol.Sc), M.A(Ed),S.L.P.S. - I)

*முன்னாள் அதிபர் - யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி*

*(1996 - 2005)*

*அச்சுவேலி ம.வி., நடேஸ்வராக் கல்லூரி,*

*கட்டுவன்புலம் ம.வி., முல்லைத்தீவு ம.வி.*

வாணியின் ஒருவடிவாய் வந்திங்கு நீயுதித்தாய்
பூமியில் உன் புகழைப் பொறித்துமே பிரிந்துவிட்டாய்
இனியிங்கு உனது கல்விப்பணிபோல் உன்னுடைய
வழிநின்று பணியுரியும் பண்புடையோன் வருவதெப்போ.

பதிவைத்து வளர்த்தெடுத்த பயன்மிகு கல்விக் கோவே
ஒளிதைத்துக் கல்விவானில் ஒளிர்ந்திட்ட பெருஞ்சுடரே
கதியென்று கல்விப்புலம் உனைநம்பி வாழ்ந்திருக்க
விதியென்று வீழ்ந்தனையோ விழிசிந்தி விம்முகிறோம்.

விஜயதசமி இன்று ..... எங்கள் மழலைகளின்
வித்தியாரம் பத்தின் அகரம் எழுதும் நாள்
வித்தையில் பெருந்தகைநீர் மத்தியில் இணைந்த தினம்
மத்தியத்தின் மணிக்கொடியில் மண் சரித்த நாளுமிது
விதியின் கரம் எழுதிற்று இராச துரையின் நாளிதென்று
ஏடு தொடக்குமிந்த விஜயதசமித் திதியன்று
பீடுநடைபயின்று தொண்ணூற்றி ஆறுமுதல்
மூடுமந்திரமாய் மண்சரிந்த நாள் வரையில்
நாடே வியந்துரைத்த ராச அதிபதியாய்
கூடுபோல் காத்த மத்தியத்துத் தேனீக்கள்
சோக இசை ரீங்கரிக்கும் உன் பிரிவு தாழாமல்.

ஓடி மறைந்துவிட்ட ஓராண்டு தன்னில் யாரும்
மூடி மறைக்க விடாதுன் நினைவும் பெரும்புகழும்
பல்கலைக் கழகமென்ன அரிமாச் சங்கமென்ன
கல்விப் புலங்களென்ன சமூகத் துறைகளென்ன
யார்வாயிலுமுன்தன் தனிச்சிறப்புப் பாடுதையா
தேடி நீர் காட்டி வைத்த கல்விப் பெரும் செல்வம்
கோடிபெறும் மனவைரம் நல்ஒழுக்கம் எமைக் காக்கும்
"உமைப்பாடிப் புகழ்வதற்கு" பலவாயிரமுண்டு ஐயா.

நீர் தந்த வீரமின்று வீரியமாய் நிற்குதையா...
உங்கள் சக்தியில் சிந்திய முத்துக்கள்
உங்களைச் சிதறின ஒருசில குண்டுகள்
எங்களை சிதறவிடா திணைந்தே வளர்க்கும்.
காடு பார்த்த இடிந்த சுவர்களிடை மத்தியின்
மேடு பர்[illegible]று முன்பரந்த கட்டடம் மைதானத்தை
"நற்கோடு" [illegible]டுப்பல கோலங்கள் உருவாக்கி
கல்விக்[illegible]ன்று கணனிக்கென்று பல செயற்பாடு
நவீன மரபுகளில் மத்திய கலாசாரம் உம்மால்
புதிய பாதையிலே வீறுநடை போட்டதுண்மை

சந்தித்த சிலகணத்தில் அனைவருமே நண்பராவார்
சிந்தித்து சிறப்பறிந்து உறுதுணைகள் பலபுரிந்து
நிந்திப்பு பல கண்டும் உறுதியுடன் பணிசெய்து
தித்திப்பாய் எம் மனதில் வழிகாட்டும் ஒளியானீர்
சிந்தித்தால் சிந்தை குலையும் நோய்கள் பல திரளும்
ஆண்டொன்று முடியுமுன்னே நீர் கண்ட முதல் மத்தி
மீண்டுமொருமுறை வந்திடுமோ என அச்சம்.

விண்ணுறையும் விளக்கே தோன்றாத் துணையாய்
எம்மனக் கோயிலிலே வருடமாய் இணைந்திருந்தீர்
மைந்தருக்கு தெய்வபலம் தந்து நின்றிருந்தீர்
ஆன்மீக வலுவாக குடும்பத்தை மெருகேற்றி
ஆழ்மனது சக்தியாய் எம்மையெலாம் நெறிப்படுத்தி
சக்தியாய் பலமாய் உறுதுணையாய்
எங்கள் மனங்களில் நிறைந்து நின்றீர்
விழி நீர்பாய கண்ணீர் சிந்தி
உமை நினைந்து உளறுகிறோம்.

| பிறந்தார் | திதி | சரிந்தார் |
|---|---|---|
| 28.09.1947 | விஜயதசமி 02.10.2006 | 12.10.2005 |

குடும்பத்தினர், சகோதரர், நண்பர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர், கல்விச் சமூகத்தினர்.

இணையம்: www.jaffnacentralrasathurai.com
மின்னஞ்சல்: jaffnacentralrasathurai@gmail.com
jaffnacentralrasathurai@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்

## ஏகாதசித் தீர்த்தம்

நாகேஸ்வரம் - அளவெட்டி

நாளை 03.10.2006 செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு அபிஷேகத்துடன் ஆரம்பமாகி 9.00 மணிக்கு அ.திருமகள் (அருணாசல வித்தியாலய மாணவி) சொற்பொழிவும் முற்பகல் 10.00 மணியளவில் வசந்தமண்டபப் பூசையும், தொடர்ந்து தீர்த்தம் இடம்பெறும் என்பதை அன்பர்கள் அனை வருக்கும் அறியத் தருகின்றோம்.

நாகேஸ்வரம் - அளவெட்டி. பொ.ப.சபை

# தொழிற்பயிற்சி பெற்றோருக்கு கொடுப்பனவு

கோப்பாய், ஒக்.2

சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சின் தொழிற்பயிற்சி பிரிவில் முதல் தொகுதியில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான பெப்ரவரி மாத ஊக்குவிப்பு கொடுப்பனவு கோப்பாய் பிரதேச செயலகத்தில் வழங்கப்படுகிறது. உரியவர்கள் தங்கள் கொடுப்பனவை பெற்றுக்கொள்ளும்படி பிரதேச செயலரால் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.(ப-72)

# சமுர்த்தி முத்திரை விநியோகம்

நவாலி கிழக்கு, நவாலி தெற்கு கிராம சேவகர் பிரிவுகளில் சமுர்த்தி நிவாரணம் பெறுபவர்களுக்கான முத்திரைகள் ஜே/135 கிராமசேவகர் அலுவலகத்தில் வைத்து சமுர்த்தி பதில் உத்தியோகத்தர்களால் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றைப் பெற்றுக்கொள்ளாதவர்களை தமது அலுவலகத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கிராமசேவையாளர் ரி.நித்தியானந்தன் தெரிவித்துள்ளார். (203-100)

# கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்



## கனகரத்தினம் பரமநாதன்

அவர்களின் அகால மரணத்தால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தலைவர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்,
தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம். (56033)

# மணல்விநியோகம் இன்மையால் கட்டடத்தொழில் பாதிப்பு

வடமராட்சி, ஒக்.2

தற்போது குடாநாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக மணல் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளமையால் கட்டடத்தொழில் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் கட்டடத்தொழிலாளர்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்து வருமானமின்றிக் கஷ்டமடைந்து வருகின்றனர்.

ஓரளவு சிமெந்து விநியோகம் இருந்தும் மணலுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் கட்டடவேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன்காரணமாகக் கட்டட வேலைகளை மேற்கொண்டவர்கள் இடைநடுவில் அவற்றை விட்டுவிட்டு இருக்கவேண்டியுள்ளதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

(203-173)

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

818 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மீனம் 25 27 33 37

29-09-2006

செல்லுபடியாகும் தொடர் இல. 5444898 - 5461083

ஜக்பொட் பரிசு ரூபா. 2,611,900/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 359,653 | 10/- | 3,596,530/- |
| 2 இலக்கங்கள் | 33,041 | 20/- | 660,820/- |
| 1 இல. + லக்கினம் | 32,482 | 30/- | 974,460/- |
| 2 இல. + லக்கினம் | 3,016 | 100/- | 301,600/- |
| 3 இலக்கங்கள் | 887 | 500/- | 443,500/- |
| 3 இல. + லக்கினம் | 78 | 5,000/- | 390,000/- |
| 4 இலக்கங்கள் | 5 | 100,000/- | 500,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,611,900/- | - |
| மொத்தம் | | | 6,866,910/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 429,167 | | 7,890,410/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 3,414,950/-

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மொனராகலை | 5457481-9-79 |
| மாத்தறை | 5445372-6-24 |
| கொழும்பு | 5459752-7-87 |
| இரத்தினபுரி | 5449623-7-58 |
| மட்டக்களப்பு | 5449447-5-89 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

# ஈராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 - 04 - 1949



மறைவு 23 - 10 - 2004

## அமரர் ஐயாத்துரை கந்தலிங்கம்

திதி: 02.10.2006 விஜயதசமி

அவ்வயத்துள் முன்னின்று அற்புதமாய் நாம் சிறக்க
வாழ்வை அர்ப்பணித்த தெய்வமே!
மெத்தையில் நாமுறங்க முள்ளில் தவமிருந்து
எம்மை பெற்ற தந்தையே!
ஈராண்டுகளானாலும் எம் ஈரவிழிகள் காயவில்லை அப்பா!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

குப்பிளான். (56032) குடும்பத்தினர்.

# அரசியல் தீர்வை வலியுறுத்தி நீர்கொழும்பில் பேரணி

நீர்கொழும்பு, ஒக்.2

இனநெருக்கடிக்கு அரசியல் தீர்வுதான் ஒரே வழி என்பதை வலியுறுத்தி நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் சர்வமதப் பிரார்த்தனையும் பேரணியும் நடத்தப்பட்டன.

நேற்றுமுன்தினம்காலை நீர்கொழும்பு புனித மரியாள் தேவாலயத்திலிருந்து புறப்பட்ட பேரணி நகரின் முக்கிய வீதிகளூடாக மாநகர சபை மண்டபத்தை வந்தடைந்தது.

தொடர்ந்து அங்கு சர்வமதப் பிரார்த்தனை இடம்பெற்றது. இதில் பௌத்த, இந்து, கத்தோலிக்க, இஸ்லாம் சமயங்களின் மதப்பிரமுகர்கள், பொதுமக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுதான் ஒரேவழி என இந்த சர்வமதப்பிரார்த்தனையில் கலந்துகொண்டோர் தெரிவித்தனர்.

# மகாத்மா காந்தி புலமைப் பரிசில்கள் - 2006 தெரிவானோர் பட்டியல்

HIGH COMMISSION OF INDIA

இந்திய அரசாங்கம் மகாத்மா காந்தி புலமைப்பரிசில் திட்டமொன்றை ஆரம்பித்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ், இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் க.பொ.த. சாதாரண தரத்தில் திறமையைக் காண்பித்துள்ள 3 - 4 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் ரூ.1500/- இந்திய ரூபா தொகை ஒவ்வொரு மாதமும் புலமைப் பரிசில்களாக இரண்டு வருட காலத்துக்கு வழங்கப்படுகிறது. அதாவது க.பொ.த. உயர்தர கல்வியை நிறைவு செய்யும்வரை புலமைப் பரிசில் தரப்படுகிறது. இந்தப் புலமைப் பரிசில் திட்டம் ஆரம்பமாகியிருக்கும் இந்த ஆண்டில் 100 இலங்கை மாணவருக்கு இந்த மகாத்மா காந்தி புலமைப்பரிசில் வழங்கப்பட்டிருக்கிறது. இன்று காந்தியின் ஜெயந்தி தினம். மகாத்மா காந்தியின் வருடாந்த பிறந்ததின கொண்டாட்ட நாள். இந்த புலமைப் பரிசில் தாரர்கள் இன்று இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் ஸ்ரீமதி நிருபமாராவ் அவர்களை சந்திக்கிறார்கள். மாணவர் தெரிவு, திறமை மற்றும் [illegible] அடிப்படையைக் கொண்டே மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்த வருடத்துக்குத் தெரிவான புலமைப்பரிசில் தாரர்களின் விபரப் பட்டியல் கீழே தரப்பட்டிருக்கின்றது.

## மகாத்மா காந்தி புலமைப்பரிசில் - 2006

| இல. | மாணவர் பெயர் | பாடசாலை |
|---|---|---|
| 01. | எஸ்.டிலுக்ஷி ஹேரத் | மகளிர் உயர் பாடசாலை, கண்டி. |
| 02. | எஸ்.சி.ஹன்துன்நெத்தி | மகளிர் உயர் பாடசாலை, கண்டி. |
| 03. | ஆர்.ஏ.எஸ்.திமந்தி பெரேரா | மகளிர் உயர் பாடசாலை, கண்டி. |
| 04. | கே.ரி.திவன்தி அபேரட்ன | பின்னவெல மத்திய கல்லூரி, பின்னவெல. |
| 05. | எஸ்.ஹெலனி அலஹகோன் | அரச விஞ்ஞானக் கல்லூரி, மாத்தளை. |
| 06. | டபிள்யூ.ஏ.என்.பிரபாத் பிந்துசர | அரச விஞ்ஞானக் கல்லூரி, மாத்தளை. |
| 07. | ஓ.ஜீ.கே.ராஷினி பிரேமவன்ஸ | அரச விஞ்ஞானக் கல்லூரி, மாத்தளை. |
| 08. | ஈ.எம்.எம்.சத்துரிகா ஏகநாயக்க | அரச விஞ்ஞானக் கல்லூரி, மாத்தளை. |
| 09. | கே.எம்.அமிலா தனஞ்ஜய சமன பண்டார | ஹாரங்கல மகாவித்தியாலயம் ஹாரங்கலகம, நாவலப்பிட்டிய. |
| 10. | ஜே.டி.மதுஷா டில்ருக்ஷி குமாரி | ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பா.ம.வி, ஹங்குரங்கெத்த. |
| 11. | வர்ணகுலசூரிய தரங்க மதுஷன் | காமினி தேசிய பாடசாலை, நுவரெலியா. |
| 12. | ஆர்.எம்.மதுவன் சமிந்த கல்யாண குமார | பொரமடுல்ல தேசிய பாடசாலை, பொரமடுல்ல. |
| 13. | ஆறுமுகம் அமுதப்பிரியா | ஹாரன்பெட்டக்கல த.ம.வி, கொட்டகலை. |
| 14. | எச்.பி.தனுஷ்கா விஜேசிகே | குளியாப்பிட்டி மத்திய கல்லூரி, குளியாப்பிட்டி. |
| 15. | எம்.எம்.கிரிஸ்ரீன ஜயசிங்க | மலியதேவ மகளிர் வித்தியாலயம், குருநாகல். |
| 16. | எச்.எம்.என்.குமுது குமாரி ஹேரத் | குளியாப்பிட்டி மத்திய கல்லூரி, குளியாப்பிட்டி. |
| 17. | எம்.எம்.ஜூலிய சமரநாயக்க | மலியதேவ மாதிரி மகாவித்தியாலயம், குருநாகல். |
| 18. | டபிள்யூ.ஏ.டி.ஜயாங்கனி ஹேரத் | திருக்குடும்ப கன்னியாமடம், வென்னப்புவ. |
| 19. | கே.எஸ்.டி.பெரேரா | தம்மிஸ்ஸர தேசிய பாடசாலை, நாத்தாண்டியா. |
| 20. | எம்.யூ.எப்.ரிப்கா | மிஸ்பா மகாவித்தியாலயம், கண்டக்குளி. |
| 21. | எம்.ஷட்.எஸ்.நாஷாத | பாத்திமா மகளிர் வித்தியாலயம், புத்தளம். |
| 22. | தனுஷ்க டில்ஹானி ருவன் பத்திரன | விஹாரமகாதேவி மகளிர் மகாவித்தியாலயம், பதுளை. |
| 23. | எம்.ஏ.கே.மகேஷ கல்யாணி | மஹியங்கனை தேசிய பாடசாலை, மஹியங்கனை. |
| 24. | ஏ.எம்.டிலானி குமாரி அல்ஹகோன் | பண்டாரவளை மத்திய கல்லூரி, பண்டாரவளை. |
| 25. | பி.கே.எம்.டில்றுக்ஷி ருவன்பதிரன | பண்டாரவளை மத்திய கல்லூரி, பண்டாரவளை. |
| 26. | எம்.கே.ஐ.சரங்கி அரியபாலா | மஹாநாம தேசிய பாடசாலை, மொனராகலை. |
| 27. | நயோமி சமிகா விதானபத்திரன | செவனகல மகாவித்தியாலயம், செவனகல. |
| 28. | ஆர்.எம்.சுசர்னா ரத்னாயக்க | மஹாநாம தேசிய பாடசாலை, மொனராகலை. |
| 29. | என்.எம்.கயிலா சிந்தகா பிரேமரத்னே | மஹாநாம தேசிய பாடசாலை, மொனராகலை. |
| 30. | பி.க்யன் பொன்னம்பேட | தாமசோகா கல்லூரி, அம்பலாங்கொடை. |
| 31. | ரி.வி.லஹிரு சதுரங்க | மஹிந்த கல்லூரி, காலி. |
| 32. | என்.எச்.கே.சமர சம்பத் | கிறைஸ்ட் சேர்ச் ஆண்கள் கல்லூரி, பத்தேகம. |
| 33. | டி.மதுசங்க தஹநாயக்க | ரிச்மண்ட் கல்லூரி, காலி. |
| 34. | ஹிமாஷா ஜானவலி சமரநாயக்க | சுஜாத்தா மகளிர் வித்தியாலயம், மாத்தறை. |
| 35. | உத்பால எரந்தி குமநாயக்க | புனித தோமஸ் உயர்தர மகளிர் பாடசாலை, மாத்தறை. |
| 36. | ஏ.கே.சி.மதுசங்க அபேவர்த்தன | குமாரதுங்க முனிதாச மகாவித்தியாலயம், டிக்வெல்ல. |
| 37. | என்.என்.எம்.பி.ஜி.கஸ்னா கங்கா | ராஹுல கல்லூரி, மாத்தறை. |
| 38. | டபிள்யூ.ஏ.சஜக பிரப்பாத் | வீரகெட்டிய ராஜபக்ஷ மத்திய கல்லூரி, வீரகெட்டிய. |
| 39. | டபிள்யூ.ஜி.திலேத் ருவான் | வீரகெட்டிய ராஜபக்ஷ மத்திய கல்லூரி, வீரகெட்டிய. |
| 40. | பி.ஏ.வருண மதுசங்கா | வீரகெட்டிய ராஜபக்ஷ மத்திய கல்லூரி, வீரகெட்டிய. |
| 41. | பி.ஜி.சி.கயானி கௌசல்யா | வீரகெட்டிய ராஜபக்ஷ மத்திய கல்லூரி, வீரகெட்டிய. |
| 42. | டபிள்யூ.கே.ஷாலினி மல்ஷா | அனுராதபுரம் மத்திய கல்லூரி, அனுராதபுரம். |
| 43. | ஏ.எம்.ருவான் குமார அதிகாரி | அனுராதபுரம் மத்திய கல்லூரி, அனுராதபுரம். |
| 44. | ஜே.எச.எம.நதீரா சுபுன் [illegible]வீர | அனுராதபுரம் மத்திய கல்லூரி, அனுராதபுரம். |
| 45. | டி.எம்.டினேஷ் மதுசங்க | அனுராதபுரம் மத்திய கல்லூரி, அனுராதபுரம். |
| 46. | என்.டபிள்யூ.வி.ஏ.சி.சாந்தனி நாணயக்கார | றோயல் மத்திய கல்லூரி, பொலன்னறுவை. |
| 47. | டபிள்யூ.ஜே.எஸ்.பி.எஸ்.ஹர்ஸனி டிசில்வா | றோயல் மத்திய கல்லூரி, பொலன்னறுவை. |
| 48. | என்.யூ.தானக குணசேன | கிரிதலகம ம.வி, கிரிதல. |
| 49. | டி.ரி.எச்.பிரபாஸினி ரட்ணவீர | றோயல் மத்திய கல்லூரி, பொலன்னறுவை. |
| 50. | பி.எம்.எல்.ஆர்.டி.பிரியதர்சன ஜெயசேகர | கேகாலை ம.வி., கேகாலை. |
| 51. | என்.நிலானி தீபிகா தர்மரட்ண | கேகாலை மகளிர் ம.வி., கேகாலை. |
| 52. | எச்.கே.ஜி.மதுசங்கா விஜேந்திரசிறி | சுவர்ணஜெயந்தி ம.வி., கேகாலை. |
| 53. | ஜே.எம்.விமுக்தினி திஸநாயக்க | புனித ஜோசப் மகளிர் ம.வி, கேகாலை. |
| 54. | கே.எம்.ஐ.உதயாங்கனி ரணசிங்க | பேர்ஹுஸன் உயர்தர பாடசாலை, இரத்தினபுரி. |
| 55. | கே.எல்.பந்துல பிரியதர்சன | சீவலி மத்திய கல்லூரி, இரத்தினபுரி. |
| 56. | தரங்க ஹேமால் கொடகெதர | சீவலி மத்திய கல்லூரி, இரத்தினபுரி. |
| 57. | எச்.நிறஞ்சலா பிரியசாந்தி | பேர்ஹுஸன் உயர்தர பாடசாலை, இரத்தினபுரி. |
| 58. | மிகல்வாசன் ஹேரசன் மதுசங்கா | ஆனந்தா கல்லூரி, கொழும்பு - 10. |
| 59. | எம்.காஞ்சனா கரக்க ராபில் | றோயல் கல்லூரி, கொழும்பு - 07. |
| 60. | டபிள்யூ.ஏ.பியூமி சசிகலா விக்ரமாரச்சி | கோதமி மகளிர் வித்தியாலயம், கொழும்பு - 10. |
| 61. | ஜி.நடேசனி மகேஷிகா | தக்சிலா மத்திய கல்லூரி, கொறனை. |
| 62. | சி.துலானி கொதலாவல | தக்சிலா மத்திய கல்லூரி, கொறனை. |
| 63. | டி.எச்.பி.சில்வா குணசேகர | களுத்துறை மகளிர் தேசிய பாடசாலை, களுத்துறை. |
| 64. | பி.எஸ்.சமீரா மதுஷன் | களுத்துறை மகளிர் தேசிய பாடசாலை, களுத்துறை. |
| 65. | டபிள்யூ.ஆர்.தாரக பிரியாஞ்சனி | இரத்தினவளி மகளிர் வித்தியாலயம், கம்பஹா. |
| 66. | எச்.பி.ஏ.லக்மாலி ரணவீர | இரத்தினவளி மகளிர் வித்தியாலயம், கம்பஹா. |
| 67. | ஏ.டி.இஸங்க சதுரங்கி | இரத்தினவளி மகளிர் வித்தியாலயம், கம்பஹா. |
| 68. | டபிள்யூ.எம்.மதுஷி[illegible] கல்பனி | ஜனாதிபதிக் கல்லூரி, மினுவாங்கொட. |
| 69. | ஆர்.செந்தூரன் | உவர்மலை விவேகானந்தா கல்லூரி, திருகோணமலை. |
| 70. | பி.விஸ்வலிங்கம் | ஆர்.கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை. |
| 71. | ஜே.பானுசங்கர் | ஆர்.கே.எம்.ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை. |
| 72. | எம்.ஆர்.எம்.பாரிஸ் | கிண்ணியா மத்திய கல்லூரி, கிண்ணியா. |
| 73. | ஏ.எல்.எம்.எச்.பஸ்ரி | கல்/ஷாகிரா கல்லூரி, கல்முனை. |
| 74. | எம்.ஷட்.ஏ.றுடான் | கல்/அல் மன்னார் மத்திய கல்லூரி, மருதமுனை. |
| 75. | ஏ.எப்.ஸனீரா | கல்/சாம்ஸ் மத்திய கல்லூரி, மருதமுனை. |
| 76. | எஸ்.சிவசொரூபினி | கல்/கார்மல் பாத்திமா கல்லூரி, கல்முனை. |
| 77. | ஜி.நிருபன் | புனித மைக்கல் கல்லூரி, மட்டக்களப்பு. |
| 78. | அபிராமி ரங்கநாதன் | விவேகானந்தா மகளிர் ம.வி., மட்டக்களப்பு. |
| 79. | எம்.ஐ.எப்.ஜெயாஸா | மத்திய மகாவித்தியாலயம், காத்தான்குடி. |
| 80. | வினோதினி பாலதாஸர் | புனித சிசிலா மகளிர் தேசிய பாடசாலை, மட்டக்களப்பு. |
| 81. | எஸ்.நடராசா | யா/இளவாலை கொன்வன்ட் ம.ம.வி, இளவாலை. |
| 82. | ரி.உருத்திரகோடீஸ்வரன் | யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம். |
| 83. | வி.யோகசுந்தரம் | யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம். |
| 84. | எம்.பிரதீபன் | யா/இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம். |
| 85. | வி.வினிதரன் | முல்/குமுழமுனை ம.ம.வி, குமுழமுனை. |
| 86. | ஏ.யோகநாதன் | முல்/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, புதுக்குடியிருப்பு. |
| 87. | எஸ்.சுகிதரன் | முல்/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி, புதுக்குடியிருப்பு. |
| 88. | கே.கனகசபாபதி | முல்/வித்தியானந்தா கல்லூரி, முள்ளியவளை. |
| 89. | எஸ்.குலேந்திரன் | கிளி/கிளிநொச்சி ம.வி, கிளிநொச்சி. |
| 90. | எம்.றஜிதன் | கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி. |
| 91. | பி.கஜன் | கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி. |
| 92. | ஜெயரட்ணம் துளசி | கிளி/கிளிநொச்சி மத்திய கல்லூரி, கிளிநொச்சி. |
| 93. | ஏ.எப்.நவ்ப்ரிஸா | மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, மன்னார். |
| 94. | எம்.அமிர்தவர்சினி | மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, மன்னார். |
| 95. | ஏ.பிரவீன் குமார் கொரஸ் | மன்/புனித ஷேவியர் ஆண்கள் தேசிய பாடசாலை, மன்னார். |
| 96. | கே.ஜெயனி | மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, மன்னார். |
| 97. | [illegible] | யா/கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில். |
| 98. | [illegible] | வவு/தமிழ் மகாவித்தியாலயம், வவுனியா. |
| 99. | [illegible] | வவு/சிவப்பிரகாசம் மகளிர் கல்லூரி, வவுனியா. |
| 100. | அபிராமி சிவமைந்தன் | |

அனைவருக்கும் எங்கள் பாராட்டுக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

# ஊடக சுதந்திரத்துக்குச் சவால்!

'யுத்தம் ஒன்று வெடிக்கும்போது முதலில் பலியாவது உண்மை' - என்று கூறுவார்கள்.

அதனால், யுத்தம் வெடிக்கும்போது முதலில் வாயடைக்கப்படுவது உண்மையை வெளிப்படுத்த முயலும் ஊடகங்கள் தாம்.

பாதுகாப்புத் தொடர்பான செய்திகளை வெளியிடுவதில் பொறுப்புணர்வுடன் நடந்து கொள்ள வேண்டும் என்ற தலைப்பில் ஊடக நிறுவனங்களுக்குப் பாதுகாப்பு அமைச்சு அனுப்பியுள்ளதாகக் கூறப்படும் கடிதம் - அல்லது அறிவுறுத்தல் - இவ்வகையில், ஊடகங்களின் வாய்க்கு 'பிளாஸ்திரி' போட்டு ஒட்டும் போக்கிலேயே அமைந்திருக்கின்றது.

இந்த அறிவுறுத்தல், உத்தியோகப்பற்றற்ற தணிக்கை ஒன்றை ஊடகங்கள் மீது அரசு திணித்துள்ளதையே வெளிப்படுத்தியிருக்கின்றது என விளக்கமளித்திருக்கிறது சுதந்திர ஊடக இயக்கம்.

*"பாதுகாப்பு மற்றும் தேசியப் பாதுகாப்புத் தொடர்பாக ஊடகங்கள் சேகரித்த செய்திகள், அவற்றை வெளியிடுவதற்கு முன்னர் - அவை சரியாக வெளியாவதை உறுதிப்படுத்துவதற்காக - தேசியப் பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையத்தினால் தெளிவுபடுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்"* - என்ற சாரப்பட பாதுகாப்பு அமைச்சு, ஊடக நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் அறிவு றுத்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இந்த உத்தரவே, சட்டத்தில் அல்லது ஒழுங்கு விதியில் வரையப்படாத தணிக்கை நடவடிக்கையாக அமைந்திருக்கின்றது என சுதந்திர ஊடகவியலாளர்கள் சீறுகின்றனர்.

பிரசுரத்துக்கு அல்லது வெளியீட்டுக்கு முன்னர் ஒரு செய்தியை அரச நிறுவனம் ஒன்றின் உறுதிப்படுத்தலுக்கு அல்லது தெளிவுபடுத்தலுக்கு சமர்ப்பிக்கும்படி கோருவது ஒரு வகையில் தணிக்கையன்றி வேறில்லை!

செப்டெம்பர் 17 ஆம் திகதி பத்து முஸ்லிம்கள் பொத்துவில் பகுதியில் கொலையுண்ட சம்பவத்தில், அரச படைகளில் ஒரு பிரிவினரின் கைகள் சம்பந்தப்பட்டுள்ளன எனக் குற்றம் சுமத்தப்படுகின்றது. அதையடுத்தே, பாதுகாப்பு அமைச்சிடமிருந்து ஊடகங்களுக்கு மேற்படி அறிவுறுத்தல் கடிதம் வெளிவந்திருப்பதை சுதந்திர ஊடக இயக்கம் சுட்டிக்காட்டுகின்றது.

*"வன்முறைப் பிணக்கு உச்சமடைந்து, கொலைகளும், காணாமற் போதலும் தினசரி நிகழ்வாகி, வன்முறைக்கும், பிணக்குகளுக்கும் காரணமான தரப்புகள் தங்கள் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து, பொது மக்களுக்கு எதிராக வன்முறைகளை இழைக்கின்றன என்று குற்றஞ்சுமத்தப்படும் பின்னணியில் -*

*ஒவ்வொரு செய்தியையும் தேசியப் பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையத்தின் தெளிவுபடுத்தலுக்கு உட்படுத்த வேண்டும் என்று கோருவது சாத்தியமற்றது; தேவையற்றது; அரச தணிக்கை நடவடிக்கையாகக் கருதப்படக் கூடியது."* - என்று தெட்டத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றது சுதந்திர ஊடக இயக்கம்.

அந்த அமைப்பு தெளிவுபடுத்தியுள்ள மற்றொரு அம்சமும் இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டும்.

*"வன்முறைகள், அராஜகங்கள் குறித்து மிகத் துல்லியமான - பக்கச் சார்பற்ற - செய்திகளை தேசியப் பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையத்திடமே பெற முடியும் என்ற சாரப்பட பாதுகாப்பு அமைச்சின் கடிதம் அமைந்துள்ளது. ஆனால், கடந்த இரண்டு தசாப்த கால அனுபவப்படி, பொது மக்களுக்கு எதிராகவும், மனித உரிமைகளை மீறும் விதத்திலும் தங்களால் புரியப்பட்ட தவறான நடவடிக்கைகள் தொடர்பாக எந்தத் தரப்பும் சரியான செய்திகளைத் தரவேயில்லை என்பதே நிரூபிக்கப்பட்டுள்ளது."* - என அந்த அமைப்பு சுட்டிக்காட்டுவது நூற்றுக்கு நூறு வீதம் உண்மையன்றி வேறில்லை.

இதற்கு உதாரணத்துக்கு வேறு எங்கும் செல்லத் தேவையில்லை. திருகோணமலை நகரின் மத்தியில் கடந்த ஜனவரி இரண்டாம் திகதி மாலை அப்பாவித் தமிழ் மாணவர்கள் ஐவர் கோரமாகச் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவமே நல்ல சான்று.

அந்த ஐந்து மாணவர்களும் தலைக்கு அருகில் மிக நெருக்கமாகத் துப்பாக்கிகள் வைக்கப்பட்டு சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமையை நிரூபிக்கும் பட ஆவணச் சான்றுகள் 4 ஆம் திகதி காலையில் 'உதயன்', 'சுடர் ஒளி' பத்திரிகைகளில் பிரசுரமான பின் னர்தான் - அன்று மதியம் அளவில்தான் - அந்த ஐந்து மாணவர்களினதும் சடலங்களில் சூட்டுக் காயங்கள் இருந்தமையை அரசின் பாதுகாப்பு வட்டாரங்கள் ஒப்புக் கொண்டன.

அதுவரை, அந்த ஐந்து அப்பாவி மாணவர்களும் புலிகள் என்றும், படையினரைத் தாக்க அவர்கள் எடுத்து வந்த வெடிகுண்டு வெடித்தே அவர்கள் உயிரிழந்தார்கள் என்றுமே, 'பாதுகாப்பு மற்றும் தேசியப் பாதுகாப்புத் தொடர்பான துல்லியமான - தெளிவுபடுத்தப்பட்ட - தகவல்களை வெளியிடக் கூடிய பாதுகாப்பு வட்டாரங்கள்' தகவலும், செய்தியும் வெளியிட்டுக் கொண்டிருந்தன!

இப்போதைய அறிவுறுத்தல்படி, தேசியப் பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையத்திடம், அந்தச் செய்தியை உறுதிப்படுத்தி, தெளிவுபடுத்தி, அது தரும் 'துல்லியமான' செய்தியை மட்டுமே இந்த ஐந்து மாணவர்கள் படுகொலை தொடர்பான செய்திகளை வெளியிடும் விடயத்திலும் ஊடகங்கள் கையாண்டிருக்குமானால் -

இந்த ஐந்து பேரும் அரச படையினரைத் தாக்குவதற்காகத் தாங்கள் கொண்டு வந்த வெடிகுண்டு வெடித்து உயிரிழந்தவர்களாகவே உலகுக்கு இன்றும் அறியப்படுத்தப்பட்டிருப்பார்கள்; அடையாளப்படுத்தப்பட்டிருப்பார்கள்.

திருகோணமலையில் ஐந்து அப்பாவித் தமிழ் மாணவர்கள் படுகொலையில் பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்கா விட்டாலும், உண்மை என்னவென்பது சற்றேனும் அம்பலப்படுத்தக் கூடிய வாய்ப்பு சுதந்தி ஊடகச் செயற்பாட்டினால்தான் கிட்டியது. ஆனாலும், அந்த மாணவர்களின் சடலங்களைப் படம் பிடித்து உண்மையை அம்பலப்படுத்திய 'குற்றத்துக்காக' ஓர் ஊடகவியலாளன் நட்ட நடு வீதியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்படும் தண்டனைக்கு ஆளாகினான். அது வேறு விடயம்.

ஆனால், அப்பாவி மாணவர்கள் ஐவர் படுகொலை போன்ற விவகாரங்களில் பொதிந்து கிடந்து வெளிப்படும் உண்மைகளைக் கண்டு அஞ்சுவோர், அத்தகைய உண்மைகள் எதிர்காலத்தில் வெளிப்படாமல் - அம்பலப்படாமல் - அடைக்க, புதுப்புது ஒழுங்கு விதிகளையும், அறிவுறுத்தல்களையும், வழிகாட்டி நெறிகளையும் திணிக்கக் கங்கணம் கட்டியுள்ளனர் என்பது தெளிவாகத் தெரிகின்றது. அதற்கான அதிகாரம் அவர்களிடம் இருப்பதால் அப்படித்தான் அவர்கள் செய்வார்கள். அதுவே, கடந்த காலத்திலும் நிகழ்ந்தது. இப்போதும் நடக்கிறது. அவ்வளவே.



'சீடா' மற்றும் 'வேள்ட் விஷன்' நிறுவனங்களின் அனுசரணையுடன் சுகவாழ்வு நிறுவனத்தினரால் நேற்று சிறுவர் மகிழ்வகத்தில் நடத்தப்பட்ட சிறுவர் தின நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்ப்பாண நீதிபதி இ.த.விக்னராஜா உரையாற்றுகிறார். ஜனாதிபதிக்கு அனுப்பப்படவுள்ள சிறுவர்களது வாசகங்களை சிறுவர் ஒருவர் எழுதுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட சிறார்களையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள் நல்லூர் செய்தியாளர்)

## பேக்கரி உரிமையாளர் சங்கத்துக்கு இரண்டாயிரத்து 830 மூடை கோதுமை மா

### யாழ்.செயலகத்தினால் கையளிப்பு

கல்வியங்காடு, ஒக்.2

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்திற்கு பாண் உற்பத்திக்கென இரண்டாயிரத்து 830 மூடை கோதுமை மா யாழ்.அரச அதிபரால் வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு வழங்கப்பட்ட கோதுமை மா சங்கத்தின் அங்கத்துவ பேக்கரிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு வருவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - பாண் தயாரிப்புக்குத் தேவையான ஏனைய பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் -

மின்சார விநியோகம் சீரின்மையாலும், விறகுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுவதாலும்-

பாண் தயாரிப்பதில் சிக்கல்கள் தோன்றியுள்ளதாக யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. (79)

## விண்ணப்ப் முடிவு திகதி நீடிப்பு

அச்சுவேலி, ஒக்.2

பட்டதாரி ஆசிரியர்களுக்கான பட்டப்பின்கல்வி டிப்ளோமா முழுநேரப் பாடநெறிக்கான அனுமதிப்பரீட்சைக்கான விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதி எதிர்வரும் 16வரை நீடிக்கப்பட்டுள்ளது.

செப்ரெம்பர் முதலாம் திகதிய வர்த்தமானிப்படி இதற்கான விண்ணப்ப முடிவு திகதி நேற்று என அறிவிக்கப்பட்டிருந்தது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிலவும் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு முடிவுதிகதி எதிர்வரும் 16ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. (203-117)

## முதியோர் வாரம் கொண்டாட அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், செப்.2

வடக்கு - கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் நேற்று முதல் எதிர்வரும் 7ஆம் திகதிவரை முதியோர் வாரம் கொண்டாடப்படவேண்டும். இவ்வாறு மாகாண சமூகசேவைகள் திணைக்கள பணிப்பாளர் என்.ஆர்.ரஞ்சினி வடக்கு - கிழக்கில் உள்ள சகல பிரதேச செயலகங்களுக்கும் அறிவித்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக மேலும் அவர் அறியத்தருகையில்;

முதியோர் நலன் பற்றியும் அவர்களுக்கு கௌரவமும் மரியாதையையும் வழங்கும் வகையிலும்

வைபவங்கள் பிரதேச மட்டத்தில் ஒழுங்கு செய்து நடத்தப்பட்டு வர வேண்டும். முதியோர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை எவ்வாறு கிராம மட்டத்தில் தீர்த்துக்கொள்வது தொடர்பாகவும் -

பாடசாலை மட்டத்தில் கவிதை, கட்டுரை போட்டிகளை நடத்தி பரிசில் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார்.

மேற்படி முதியோர் விழாவிற்கு பிரதேச சபைகள், சனசமூக நிலையங்களின் உதவியை நாடுமாறு கோரியுள்ளார்.(ப-95)

## நகரின் சுகாதாரத்தைப் பேண மக்களின் உதவியும் அவசியம்

### யாழ். மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

நல்லூர், ஒக்.2

நகரின் சுகாதாரத்தைப் பேணுவதில் மக்களுக்கும் அதிக பொறுப்பு உண்டு. மாநகரசபையினர் மட்டும் அதனைத் தனித்து நின்று நிறைவேற்ற முடியாது. இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

சுகாதாரம் மற்றும் அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகளில் மக்களின் பங்களிப்பும், உதவியும் அவசியம். மக்களின் உதவியுடனேயே நாம் நகரை சுகாதாரமாக வைத்திருக்க முடியும். தனியே மாநகர சபையினரால் நகரைச் சீராகப் பேண முடியாது - என்றார்.(203-111)

## காத்தான்குடியில் குழு மோதல்கள் அங்கு பொலிஸ் ஊரடங்கு அமுல்!

மட்டக்களப்பு,ஒக்.2

மட்டக்களப்பு மாவட்டம் காத்தான்குடிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரு குழுவினருக்கிடையில் மோதல் வெடித்தது. இதனையடுத்து, அங்கு நேற்றுக் காலைமுதல் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

காத்தான்குடிப் பிரதேசத்திலுள்ள இரண்டு முஸ்லிம் குழுக்களுக்கு இடையில் நேற்றுமுன்தினம் வெடித்த மோதலில் மூவர் காயமடைந்தனர். 2 மோட்டார் சைக்கிள்கள் எரிக்கப்பட்டன. 8 வீடுகள் சேதப்படுத்தப்பட்டன. அப்பகுதி எங்கும் பெரும் பதற்றம் ஏற்பட்டது. பொலிஸார் சம்பவ இடத் துக்கு விரைந்து நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயன்றனர். எனினும், மோதல் சம்பவம் தொடரும் சாத்தியம் தென்பட்டதால் அங்கு பொலிஸ் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. இந்த ஊரடங்குச் சட்டம் மாலை 6 மணி வரை நீடித்தது. பின்னர் தளர்த்தப்பட்டது.

இது தொடர்பாக குறித்த இரு குழுக்களின் பிரதிநிதிகளையும் அழைத்து பொலிஸார் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதனையடுத்து, புனித ரம்ழான் நோன்புக் காலத்தில் வன்செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்த்து அனைவரும் அமைதி பேண வேண்டும் என்று பொலிஸாரும் குறித்த இரு குழுக்களின் பிரதிநிதிகளும் இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க)

## 52 வெளிநாடுகளின் தூதர்களை ஒன்றாகச் சந்திக்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஒக்.2

வடக்கு - கிழக்கு பிரச்சினை தொடர்பாக இதுவரை எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது பற்றி இலங்கையில் உள்ள 52 நாடுகளின் தூதுவர்கள், இராஜதந்திரிகளுக்கு விளக்கமளிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் என்று வெளிநாட்டு அமைச்சு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார, கலாசார மற்றும் நிர்வாக ரீதியிலான நடவடிக்கைகள் பற்றியும் இந்தப் பிரதிநிதிகளுக்கு அறிவுறுத்தப்படும். இது தொடர்பான மூன்றுநாள் செயலமர்வு கொழும்பு கலதாரி ஹோட்டலில் இடம்பெறுகிறது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்று பின்னர் இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதுவர்களை அவர் கூட்டாகச் சந்திப்பது இதுவே முதல் தடவையாகும்.

சர்வதேச சமூகத்திற்கு இலங்கையின் வடக்கு கிழக்குப் பிரச்சினை தொடர்பாக சரியான தகவல்களை வழங்குவதற்காக இச் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக வெளிநாட்டு அமைச்சு தெரிவித்துள்ளது. (க)

## நாடாளுமன்றில் நாளை சு.க. - ஐ.தே.க. பேச்சு!

கொழும்பு,ஒக்.2

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையிலான அடுத்த சுற்றுப் பேச்சுக்கள் நாளை செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளன.

பொது இணக்கப்பாடு ஒன்றை எட்டுவது தொடர்பாக இரு கட்சிகளுக்குமிடையே மூன்றாம் கட்டமாக இப் பேச்சுக்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சுதந்திக் கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் பொதுவான இணக்கப்பாடு காணும் வகையில் ஆறு அம்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன எனவும், இதுவரை இடம்பெற்ற பேச்சுக்கள் சாதகமான முடிவுகளை வெளிப்படுத்தியுள்ளன என்றும் ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். (க)

## மூதூர் படுகொலை விசாரணை அவுஸ்திரேலிய நிபுணர் குழு அடுத்த வாரம் இலங்கை வரும்

கொழும்பு,ஒக்.2

மூதூரில் 17 தொண்டர் அமைப்பினர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளவென அவுஸ்திரேலிய நிபுணர்கள் குழுவொன்று அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளது.

அவுஸ்திரேலிய நிபுணர்களின் சேவையைப் பெறுவதற்கான பேச்சுகள் இலங்கை - அவுஸ்திரேலிய அரசுகளுக்கிடையே இடம்பெற்றதை யடுத்து இந்த நிபுணர் குழு இலங்கை வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பேச்சுகளின்படி படுகொலை செய்யப்பட்ட 'அக்ஷன் பெயிம்' தொண்டர் நிறுவனத்தின் 17 ஊழியர்களின் படுகொலை விசாரணை இடம்பெறும் போது அவுஸ்திரேலிய நிபுணர்கள் குழு அந்த விசாரணைகளை அவதானிப்பதுடன், மரபணு மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான ஆலோசனைகளையும் வழங்கும்.

இந்தக் கொலைகள் தொடர்பாக வெளிப்படையான, வலுவான விசாரணைகளை மேற்கொள்வதற்காகவே அவுஸ்திரேலிய நிபுணர்களின் சேவை கோரப்பட்டுள்ளதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்துக்கு முகவர்களும் கப்பலில் பொருள்களை ஏற்றிச் செல்வதற்கு வசதி

## ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.02

யாழ்.குடாநாட்டுக்கு எரிபொருள்களுடன் கூடிய கப்பலை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. - என்று அரசு தெரிவித்துள்ளது. அத்துடன் முகவர்களும் கப்பல்களில் பொருள்களை ஏற்றிச்செல்ல அனுமதி வழங்கப்படவுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்று வடபகுதியில் உள்ள மக்களும் பொருள்களைத் தட்டுப்பாடின்றிப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

இதன்படி பெற்றோல் மற்றும் மண்ணெண்ணெய்யை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

கொழும்பில் இருந்து வடபகுதிக்கு பொருள்களை ஏற்றிச் செல்லும் விநியோகஸ்தர்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்கும் திட்டம் ஒன்றை அரசு ஆரம்பித்துள்ளது. அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் மற்றும் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தினது ஒத்துழைப்புடன் கொழும்பு, திருகோணமலை ஆகிய துறைமுகங்களில் இருந்து பொருட்களை அனுப்பி வைக்கும் விநியோகஸ்தர்களுக்கு கப்பல் வசதி ஏற்பாடு செய்து கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியப் பொருள்கள் தவிர குறிப்பிட்ட வேறுசில பொருட்களையும் கப்பல்களில் அனுப்பி வைக்க அனுமதிக்கப்படும் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# கொழும்பு கடத்தல்கள் பற்றி ஜெனிவாவில் முறையிட முடிவு

## கூட்டமைப்பு எம்.பி. ரவிராஜ் தகவல்

கொழும்பு, ஒக். 02

கொழும்பிலும் வடக்கு -கிழக்கிலும் இடம்பெற்றுவரும் ஆட்கடத்தல்கள், படுகொலைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறையிடப்போவதாக தமிழத் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் நேற்றுக் கூறினார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொட்டாஞ்சேனைப் பொலிஸாரால் கொழும்பில் ஆட்கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த கருணாகுழு உறுப்பினர் கைதுசெய்யப்பட்டமை தொடர்பாகவும் அவரை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை தொடர்பாகவும் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கவென நேற்றுக் கொழும்பில் மக்கள் கண்காணிப்புக்குழுவால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது:-

கொழும்பில் மாத்திரமின்றி வடக்கு-கிழக்கிலும் தமிழர்கள் கடத்தப்படுகின்றனர்; கொலை செய்யப்படுகின்றனர். அங்கு ஒரு நாளைக்குச் சராசரி 04 அல்லது 05 பேர் கடத்தப்படுகின்றனர்; அல்லது கொல்லப்படுகின்றனர்.

கொழும்பில் தமிழர்கள் மாத்திரமின்றி சிங்களவர்களும் கடத்தப்படுகின்றனர். கள்வனைப்பிடிக்க கள்வனிடமே முறையிடுவதால் எந்தப் பயனுமில்லை என்பது எமக்குத் தெரியும். ஆகவேதான் இதை நாம் எமது மக்கள் கண்காணிப்புக் குழுவினூடாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்யப் போகிறோம். (க)

# வரணி, இடைக்குறிச்சியில் பரவலாக எறிகணை வீச்சு

தென்மராட்சி, செப்.02

வரணி, இடைக்குறிச்சி ஆகிய இடங்களில் கடந்தவாரம் பரவலாக எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் ஒருவர் காயமடைந்தார். பாடசாலைகள், இந்து ஆலயம், வீடுகள் பல சேதமடைந்தன.

இரவு 10 மணிக்குப்பின்னர் 25க்கு மேற்பட்ட எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததால் மக்கள் பயப்பீதியில் இரவினைக் கழித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இடைக்குறிச்சிப் பகுதியில் எறிகணை வெடித்ததில் பருத்தித்துறை பேரூந்துச்சாலை சாரதியான தனபாலசிங்கம் யோகராசா (வயது 50) என்பவருக்கு தலையில் காயமேற்பட்டது.

இடைக்குறி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலய அதிபர் அலுவலகமும், அருகில் உள்ள இந்து ஆலயமும் பலத்த சேதமடைந்தன.

வரணிப்பகுதியில் வரணி மகாவித்தியாலய வளவிலும் எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததில் அங்குள்ள கட்டடமொன்றில் இயங்கும் தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய நிலையம் சேதமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

## இலங்கை விடயத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தியப் பாதுகாப்பு விவகார சஞ்சிகையில் இவர், 'தெற்காசிய அயல் பரப்பில் இந்தியா தனது பாதையை இழந்து வருகிறது' என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார்.

அந்தக் கட்டுரையிலேயே இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா ஓரத்தில் நின்று பார்வையாளனாக இருப்பதோடு திருப்திப் படாமல் தீவிர பங்களிப்பைச் செய்திருக்க வேண்டியதன் அவசியத்தைத் தொட்டுக் காட்டியிருக்கிறார். நல்ல நோக்கத்தை வெளிக் காட்டும் நல்வார்த்தைகளும், வாய் ஜாலங்களும் இன்று கொள்கைப் பிடிமானத்துக்கும், நம்பகத் தன்மைக்கும் மாற்றீடாகி வருகின்றன என்றும் இவர் கட்டுரையில் ஒரு இடத்தில் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

சமாதான முன்னெடுப்புகள் படிப்படியாக சிதைந்து போவதற்கு இந்தியா அனுமதித்து முற்றிலும் ஒரு பார்வையாளனாகவே இருந்து வந்திருக்கிறது.

இலங்கையில் மீண்டும் ஒரு சிவில் யுத்தம் தலைதூக்கும்போது இந்தியா பாரிய விலை கொடுக்க வேண்டியிருக்கும் என்றும் சின்ஹா தனது கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"இலங்கையின் கள நிலைமையை இந்தியா முற்று முழுதாக விளங்கிக் கிரகித்துக் கொள்ள இயலாமையும், கடந்த கால கசப்பும், சமாதான சக வாழ்வுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்காக விடுதலைப் புலிகளுடன் தொழில் உறவைப் பேணுவதற்குத் தயக்கம் காட்டுவது போன்றவை எல்லாம் இந்தியாவின் வெளிவிவகாரக் கொள்கைக்கு இழைக்கப்பட்ட இமாலயத் தவறு என்பதை நிரூபிக்கப் போகிறது" என்றும் சின்ஹா எச்சரித்திருக்கிறார்.

**ஒஸ்லோ உடன்பாடு**

இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே 2002 ஒஸ்லோவில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையைக் கட்டியெழுப்புவதற்கு புதுடில்லி தவறிவிட்டது என்றும் சின்ஹா, இந்திய வெளிவிவகார அமைச்சைச் சாடியிருக்கிறார். இந்த ஒஸ்லோ உடன்படிக்கையானது, சமஷ்டி ஆட்சியமைப்பு முறையிலான தீர்வொன்றைப் பரிசீலிப்பதற்கு விடுதலைப் புலிகளை முதல் தடவையாக இணங்க வைத்திருந்தது. இதனை முன்னெடுத்திருந்தால் அவ்வளவு சிக்கல்கள் ஏற்பட்டிருக்காது.

ஒஸ்லோ பேச்சில் ஏற்பட்ட ஆக்கபூர்வமான முன்னேற்றத்தைக் கட்டி வளர்ப்பதற்குப் பதில் புலிகள் மீதுள்ள ஐயம், அவநம்பிக்கை காரணமாக கொள்கை முன்னெடுப்புகள் தொடர்பான செயல்களை மழுங்கடிப்பதற்கு இடமளித்து ஓரமாக நின்று வெறும் பார்வையாளனாக இருப்பதோடு இந்தியா திருப்திடைந்து கொண்டது - என்றும் சின்ஹா இந்தியா மீது குற்றஞ்சாட்டுகிறார்.

**சந்திரிகா மீதும் குற்றச்சாட்டு**

தனது இந்தக் கட்டுரையில் அவர், முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் சாடியிருக்கிறார்.

வடக்கு - கிழக்குக்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்றை நிறுவுவதற்கான யோசனை ஒன்றை விடுதலைப் புலிகள் ரணில் விக்கிரமசிங்கவின் அரசிடம் 2003ஆம் வருட பிற்பகுதியில் சமர்ப்பித்து ஒரு சில நாள்களுக்குள் ரணிலின் அரசை ஆட்டம் காண வைத்து கவிழ்க்கும் நடவடிக்கைகளை எடுத்ததற்காகவே சந்திரிகா குமாரதுங்கவை அவர் சாடியிருக்கிறார்.

ரணிலின் அரசைக் கவிழ்ப்பதற்கு சந்திரிகா குமாரதுங்க அரசியலுக்கு ஒவ்வாத அகௌரவமான, அரசியலமைப்புக்கு விரோதமான முறையில் நடக்க முற்பட்ட பொழுது, இந்தியாவும், சர்வதேச சமூகமும் அதனைத் தடுத்து நிறுத்துவதற்கு வேண்டிய அத்தனையையும் செய்திருக்க வேண்டும்; செய்யத் தவறிவிட்டன.

விடுதலைப் புலிகள் தொடர்பான இந்தியாவின் மாறுபட்ட போக்கும் சமாதான முன்னெடுப்புகளுக்குப் பின்னால் நின்று அதற்கு ஆதரவான முறையில் செயற்படத் தவறியமையும், இந்தியாவுக்குப் பாரிய செலவைத் தரப் போகிறது. இந்தியா பெரிய சங்கடத்தில் மாட்டிக் கொண்டிருக்கிறது.

தமிழ் நாட்டில் எழும் உணர்வலைகள் காரணமாக, விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதற்கு இலங்கை அரசுக்கு இந்தியா ஆயுத உதவிகளை வழங்க முடியாது.

இதேவேளை, புலிகள் விடயத்தில் அவர்களுக்கு எதிரான அறிக்கைகளை படாடோபமாக வெளியிட்டு வந்தமையால் சமாதானப் பேச்சு மூலம் தீர்வை முன்னெடுப்பதற்கு இருந்த வழிகளை மறைத்து விட்டிருக்கிறது என்றும் சின்ஹா எழுதியிருக்கிறார்.

இலங்கை அரசையும் சின்ஹா விட்டு வைக்கவில்லை.

இந்திய அமைதி காக்கும் படையை இலங்கையில் வலுக்கட்டாயமாக வெளியேறச் செய்வதற்கு விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து சதிசெய்த இலங்கை அரசு, இப்பொழுது விடுதலைப் புலிகளுக்குக் கடிவாளம் போட்டு அதிகாரம் செலுத்துவதற்கு புதுடில்லி அரசுக்கு அழைப்பு விடுத்து வருகிறது. அதேநேரம், நிலையான சமாதானம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு பிராந்திய வல்லரசு என்ற பங்களிப்பை வழங்குமாறும் கேட்டு நிற்கிறது என்றும் கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## கடற்கண்ணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு கடற்கண்ணிகளும் செயலிழக்கச் செய்யும் படையினரால் செயலிழக்கச் செய்யப்பட்டன. (க)

## தலைநகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

0777-443684 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தகவல்களை வழங்க லாம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜி.சீ.ஈ. ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதில் தாமதம் ஏற்பட்டதால் பரீட்சை முடிவுகளை உரிய காலத்தில் வெளியிட முடியவில்லை.

"யாழ்ப்பாண மாவட்டப் பரீட்சார்த்திகளின் புள்ளிகள் நேற்று முன்தினம் மாலை விமானம் மூலம் பரீட்சைத் திணைக்களத்திற்கு எடுத்துவரப்பட்டுவிட்டன" என்று அவர் தெரிவித்தார். (க)

## பேச்சுக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வது குறித்து உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று அமைச்சர் ரம்புக்வெல தெரிவித்தார்.

இதேவேளை - முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டன், இலங்கையின் அமைதிப் பேச்சு நடவடிக்கைகளில் ஈடுபட விரும்புகிறார் என் பது குறித்து வெளியான தகவல்கள் பற்றி அமைச்சரிடம் வினவிய போது அவர் கூறியதாவது:-

"பில்கிளின்டன் சமாதான நடவடிக்கையில் ஈடுபடும் சந்தர்ப்பத்தில் சர்வதேச சமூகம் எமது பிரச்சினைகளில் உரிய கவனம் செலுத்தும்" என்று தெரிவித்தார். (ஐ)

## ஒஸ்லோவில் புலிகளுடன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோம். ஏப்ரல் பேச்சுக்கான ,ளும் குறிக்கப்பட்டது. ஆனால், விடுதலைப் புலிகள்தான் பேச்சுமேசைக்கு வரவில்லை. பேச்சு மேசைக்குத் திரும்பாமல் இருப்பதற்குக் காரணங்களைக் கூறிக்கொண்டிருக்கின்றனர்.

இலங்கையில் நிச்சயமற்ற நிலை இப்போது உள்ளது. அனைத்து இலங்கையினரது உரிமைகளுக்கான உத்தரவாதத்துடனான தீர்வை பேச்சுமூலம் ஏற்படுத்த அரசு விரும்புகிறது. ஆகையால் விடுதலைப் புலிகள் தங்களது பயங்கரவாதத்தையும் வன்முறையையும் கைவிட்டுவிட்டு பேச்சு மேசைக்கு விரைவில் திரும்ப வேண்டும்.

பிளவுபடாத ஒரே நாட்டுக்குள் மேலதிக அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்வதை நாம் பரிசீலிக்கிறோம். ஆனால், வன்முறை மற்றும் பயங்கரவாதத்தின் மூலமாகத் தங்களது இலக்கை அடைய அவர்கள் நினைக்கலாம். தங்களது கனவை கைவிட்டுவிட்டு பேச்சு மேசைக்கு அவர்கள் திரும்புவார்கள் என்று நம்புகிறோம். இதைத்தான் உலகமெங்கும் நாம் பார்க்கிறோம்.

இந்தோனேசியாவின் ஆச்சே, அயர்லாந்து, ஸ்பெயினின் பாஸ்கியூ பிரச்சினைகளில் ஒரு காலத்தில் பயங்கரவாத அமைப்புகளாக இருந்தவர்கள், அதன் பின்னர் அமைதி வழியில் அரசியல் ரீதியாக இலக்கை அடைந்தனர்.

என்னைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகளின் சுதந்திரக் கனவு என்பது கனவாகத்தான் இருக்கும் - என்றார் பாலித கொஹென்ன.

## இனியும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடுகின்ற சுதந்திரத்தையும் இழந்துள்ளோம்.

ஒரு பானை கஞ்சிக்காக அரச நிவாரணத்தை நம்பி அனைத்தையுமே இழந்து விட்டோம்.

இந்த அனைத்து இழப்புக்களுக்கும் மத்தியிலும் தமிழ் மக்கள் தமது பிள்ளைகளின் பொன்னான கல்வியை ஒரு போதும் மறந்தவர்கள் அல்லர்.

கல்விக்காக எதையும் சமரசம் செய்தவர்களும் அல்லர். அரசியல் பொருளாதார அல்லது வேறு எந்த நலன்களுக்காகவும் கல்வியை பேரம் பேசியவர்கள் அல்லர்.

**வருந்தத்தக்கது**

மாணவர்களின் கல்வியையும் முன்னேற்றத்தையும் பேணிப் பாதுகாக்க வேண்டிய மதிப்பான கடமையைக் கொண்டுள்ள மாணவர் அமைப்பின் ஒரு பகுதியினர், மாணவர்களைப் பாடசாலைக்குச் செல்ல வேண்டாம் எனத் தெரிவிக்கும் ஒரு நிலை தோன்றி இருப்பது வருந்தத்தக்கது.

இனப் பிரச்சினை வட பகுதியினரின் கல்வித் தரத்தையே வெகுவாகத் தாக்கியுள்ளதென கல்விமான்கள் கவலையடைத்துள்ளனர்.

ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை மிகவிரைவில் நடத்தப்படவிருக்கிறது. வருடாந்தப் பரீட்சைகளுக்கு இன்னும் சில வாரங்களே உள்ளன. எனவே இனியும் காலந்தாழ்த்தாது மாணவர்களின் பகிஷ்கரிப்பை உடன்நிறுத்தும்படி சம்பந்தப்பட்டவர்களை வேண்டுகிறோம்.

**இயல்பு நிலையைத் தோற்றுவிக்குக**

இடம்பெயர்ந்து பாடசாலைகளில் இருப்போர் பாடசாலைகளை ‍ிட்டு விலகியும், போதுமான போக்குவ, ‍ச் சேவை, தடையற்ற மின்சாரம், ஊரடங்கு தளர்வு மற்றும் வசதிகளை வழங்கி இயல்பு நிலையைத் தோற்றுவித்து கல்விச் சேவை தொடர ஒத்துழைக்கும்படி சம்பந்தப்பட்ட அனைவருக்கும் வேண்டுகோள் விடுக்கிறோம் - என்றுள்ளது.

## நிவாரணப் பணியாளருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அலுவலகம் முன்பாக கிரனேட் குண்டு வெடித் தது.

இந்த வெடிப்பினால் அலுவலகத்தின் கட் டடத்துக்கு மட்டுமே சேதங்கள் ஏற்பட்டன. எவரும் காயமடையவில்லை. இந்தச் சம் பவத்தினால் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஆழ்ந்த கவலையடைந்துள்ளது.

மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டு வரும் தன்னார்வத் தொண்டு நிறுவன பணியாளர்கள் இலக்கு வைக்கப்படுவது மட்டுமன்றி அவர்கள் பாதிக்கப்படாமல் இருப் பதையும் மோதலில் ஈடுபட்டிருக்கும் தரப் புகள் உறுதிசெய்ய வேண்டும்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு 1990ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்தில் பணியாற்றுகின்றது. ஐந்து வெளிநாட்டவர்களுடன் 44 உள்ளூர் உறுப்பினர்களும் சேவையாற்றி வரு கின்றனர். - இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-12)

**விமானசேவை**

கொழும்பு - யாழ் விமானசேவை (சிறு விமானம்) தினசரி உடனடிப் பிரயாணம்.

தொடர்பு : 0775443548
0114900238

**கேதாரகௌரி பூஜை ஆரம்பம்**

02.10.2006 திங்கள் முதல் 20 தினமும் காலை 9.30 மணிக்கு பிரதான வீதியில் அமைந்துள்ள சிவன் ஆலயத்தில் அபிஷேக பூசையுடன் ஆரம்பமாகும்

பிரதமகுரு:
சிவஸ்ரீ - தானு - வாசுதேவக்குருக்கள்
(சபரீசதாசன்)

தர்மகர்த்தா
சி.பரமேஸ்வரன்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.10.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org